**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 163/2023**

**Prosecution witness : அ.சா. 7** **Date : 03.02.2024**

| | |
|---|---|
| **Name : மகேந்திரபாபு** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused 1 to 4 present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் தற்போது மேச்சேரி காவல் நிலையத்தில் இரண்டாம் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2022-ம் வருடம் மேச்சேரி காவல் நிலையத்தில் நிலையப்பொறுப்பில் இருந்தபோது, மேட்டூர் அரசு மருததுவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற காயத்தகவலின் பேரில் அங்கு சென்று உள்நோயாளியாக இருந்த சுப்ரமணி த/பெ மாது என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து உதவி ஆய்வாளர் சாந்தி வசம் ஒப்படைத்தேன். பிறகு உதவி ஆய்வாளர் புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப கடந்த 08.01.2022-ம் தேதியன்று மேச்சேரி காவல் நிலைய குற்றஎண்.14/2022 ச/பி 294(b), 324, 506(ii) இதச பிரிவில் வழக்கு பதிவு செய்தார்.

2) என்னிடம் காட்டப்படும் வாக்குமலத்தை யார் பதிவு செய்தார்கள் என்றால் நான் தான் பதிவு செய்தேன். உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-**

3) மருத்துவனைக்கு நான் எப்போது சென்றேன் என்றால் 08.01.2022ம் தேதி காலை 10.00 மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். குற்றநிகழ்வு எப்போது நடந்ததாக சொன்னார்கள் என்றால் 08.01.2022ம் தேதி நடந்ததாக சொன்னார்கள். எனக்கு தகவல் யார் சொன்னார்கள் என்றால் சாந்தி உதவி ஆய்வாளர் சொன்னார்.

4. அடிப்பட்ட நபர் பெயர் என்னவென்றால் சுப்ரமணி ஆவார். அடிப்பட்ட நபரிடம் வாக்குமூலத்தை சொல்ல சொல்ல நான் எழுதினேன். பிறகு படித்து காண்பித்தேன். பிறகு சரியாக இருந்ததால் கையொப்பம் பெற்று பதிவு செய்தேன்.கைப்படி ஏன் எழுதி வாங்க வில்லை என்றால் அவர் எழுத தெரியாது என்று சொன்னதால் நான் எழுதி வாங்கினேன்.

5. அடிப்பட நபர் வாக்குமலத்தில் கூறிய படி உண்மையா என்று உறுதிபடுத்திக்கொண்டேன். கையில், தலையில் அடிப்பட்டதாக அவர் சொன்னதை நான் உறுதிபடுத்திக்கொண்டேன் என்றால் சரிதான். பாஸ்கர் என்பவர் மண்வெட்டியால் தான் தலையில் அடித்தார் என்பது வாக்குமூலத்தில் உள்ளது என்றால் சரிதான். அவரின் வாக்குமூலத்தில் அண்ணாமலை என்பவரும் சந்திரா என்பவரும் கெட்டவார்த்தையால் திட்டினார் என்று தான் வாக்குமூலத்தில் உள்ளது என்றால் சரிதான்.

6. பிரபு என்பவர் வாக்குமூலத்தில் கத்தியை காட்டி மிரட்டினார் என்று கூறியுள்ளார் என்றால் சரிதான். எல்லோரும் சேர்ந்து மண்வெட்டியால், கட்டையால் அடித்தார்கள் என்றும் கெட்டவார்த்தையால் பேசினார் என்று வாக்குமூலத்தில் உள்ளதா என்றால் சரிதான்.

<u>மறுவிசாரணை இல்லை.</u>

**ஓம்/- தே. மயில்சாமி,**
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**மேட்டுர்.**